**கவனிக்க.**– 2006.12.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1475 - 2006 දෙසැම්බර් 08 වැනි සිකුරාදා - 2006.12.08**

1475 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1150 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1150 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, திசெம்பர் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அட்றோணி தத்துவத்தை செல்லுபடியற்றதாக்குதல்

காலி, தங்கெதர, கொரகஹவத்த, இல. 44 இல் வசிக்கும், ஹெட்டிகொட லியனதுரகே சோமசிரி எனும் நான் என்னால் பிரசித்திபெற்ற நொத்தாரிசு பி. கே. எல். பண்டார அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.06.17 ஆந் திகதிய இல. 3882 ஆம் அட்றோணி தத்துவத்தின் கீழ், காலி, தங்கெதர, கொரககஹவத்த இல. 44 இல் வசிக்கும் ஹெட்டிகொட துரகே சுமணாவதீ மீது கொடுக்கப்பட்ட அட்றோணி தத்துவத்தை செல்லுபடியற்றதாக்குவதென்றும் இதற்கு பின்பு இந்த அட்றோணி தத்துவத்தில் இவ்வித செயல்பாடும் கிடையாது என்றும் எல்லோரும் இதில் அறியவும்.

ஹெட்டி கொட லியனதுரகே சோமசிரி.

12-250

---

# ஏல விற்பனைகள்

### றுஹுன அபிவிருத்தி வங்கி - கந்தரை கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை செய்தல்

**தெவிநுவர பனன்சில்ல ஒழுங்கையில் கட்டிடங்களுடன் கொண்ட பெறுமதிவாய்ந்த காணியொன்று ஏல விற்பனை**

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் 2006.12.28 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபத்துவையில் தெவிநுவர மேற்கு, பவன்சில்ல ஒழுங்கையில் வருமான வரி இலக்கம் 65 என்ற இலங்ககோன்வத்தையில் பிரித்து, வேறாக்கப்பட்ட இலக்கம் 05 என்ற பேர்ச்சஸ் எட்டும் தசம் ஒன்றும் ஒன்பதும், (0ஏ.0றூ. 8.19பே.) என்ற மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்பச்சைகளும், பழவர்கங்களும், கட்டிடங்களும் அடங்கும். இக்காணி அதிகாரம்பெற்ற நிலஅளவையாளரான திரு. ஜே. தர்மபால அவர்களின் 1979.11.23 ஆந் திகதியின் இலக்கம் 2377 என்ற வரைபடத்தில் குறிப்பிட்டிருக்கும்.

2002.01.04 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2003.07.21 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்", "தினகரன்" ஆகிய சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை திட்ட அறிவித்தல் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- தெவிநுவர மீனவர் துறைமுக கேட்டுக்கு அருகே இடப்பக்கமாக திரும்பி மீற்றர் 200 அளவு, தூரம் சென்றதும், தென்படும் முச்சந்திக்கு அருகே இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும், கீழ் குறிப்பிடுகின்ற பணம் கொள்வனவாளரினால் பணமாக செலுத்திட வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% மும் ;
(2) உள்ளூர் அதிகாரயின் வரியாக உள்ளூர் அதிகாரிக்கு 1% மும் ;
(3) ஏலவிற்பனையாளர் தரமாக விற்பனை விலையில் 2 1/2% மும் ;
(4) ஏலவிற்பனை செலவும், இதர செலவுகளும் இருப்பின் அப்பணமும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை பம்புரணயில் இருக்கும் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்திலே சாதாரண அதிகாரிக்கு செலுத்திவிட வேண்டும்.

மேலே பொருந்தியபடி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வளவு விலையின் செலுத்தியிருக்கும் 10%க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும், வேறும் குறிப்பிட்ட விவரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

தொலைபேசி இல. 041- 2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம், பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.

தொலைபேசி இல. : 041- 2228731.

12-220

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - கடுவெல கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை*

### பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை

**காணியின் விவரணம்: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். எஸ். எல். பெர்னாண்டோ அவர்களால் 1995, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப் பட்ட வரைபட இல. 7624 இல் துண்டு 11ஏ எனக்குறிக்கப்பட்ட ஹேனேவத்த மற்றும் வன்னியாச்சியாவத்த என அழைக்கப்படும் பிரசுரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டானது, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன், மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபை, பத்தரமுல்லை உப அலுவலகத்தினுள் வட்டார இல. 7 இல் தலங்கமை தெற்கில் அமைந்துள்ளது. அத்துடன் பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டீ. குணதிலக்க அவர்களால் 1998, மாச்ச 30 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இல. 21 இல் 2 ஆவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட பாதைக்கான உரிமையும் உண்டு.**

**காணியின் விஸ்தீரணம் : 14 பேர்ச்சஸ்**

*(கடமைப்பட்டவரும், சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவருமான அஹங்கம விதானகே பத்மதிலக்க, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டீ. குணதிலக்க அவர்களால் 1998, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 21 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்தை அதே இடத்தில், 2006, திசெம்பர் 27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நான் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2006, சனவரி 9 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, யூன் 13 ஆந் திகதிய 'ஐலண்ட்', 'திவயின', 'தினகரன்' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலத்தின் இறுதியில் வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) இலிகிதர், கூவுவோர் கட்டணமாக ரூ 500 ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2,000.

கொள்வனவு விலையின் எஞ்சிய 90%, விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு, எஞ்சிய தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து. சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை, ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், கடுவெலக் கிளை முகாமையாளர் மற்றும் கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தை, இல. 479, ஹ. ந. வ. கோபுரம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், பிரதம முகாமையாளர் (கடன் மேற்பாரவை மற்றும் மீளப்பெறுகை) ஆகியோரிடம் பெறலாம். தொலைபேசி இல. 2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(சமாதான நீதவான்-அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

12-330

---

## தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

### தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான ஆதனத்தின் ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளை பல்லே பற்றுவின் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டுவாவல கிராமத்தில் அமைந்துள்ள நகஹவத்த என அழைக்கப்படும் காணியும் 1 பி 3 ஆம் இலக்க துண்டு என அடையாளமிடப்பட்டதும் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்டதுமான பெறுமதிமிக்க காணியின் ஏல விற்பனை**

**ஆதனங்களின் விவரணம்.**- மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளை பல்லேபற்றுவின் கெஸ்பேவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கெஸ்பேவவின் கட்டுவாவல கிராமத்தில் அமைந்துள்ள 'நகஹவத்த' என அழைக்கப்படும் காணியும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. டி. வீரசிங்கவினால் ஆக்கப்பட்ட 1995.08.30 ஆந் திகதியிட்ட 3236 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 1 பி 3 என அடையாளமிடப் பட்டதும் வடக்கில் : 6 அடி அகல பாதை ஒதுக்காக துண்டுகள் 1பி2 ஐயும், 1பி4 ஐயும் ; கிழக்கில் : 2845 ஆம் வரைபடத்தின் '1சி' ; தெற்கில் : தெல்கஹவத்தயும் ; மேற்கில் : 1பி4 ஐ 6 அடி அகல பாதை ஒதுக்காகவும் 3235 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1ஏ 3ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட வரைபடத்திற்கமைய பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.02253 ஹெக்டேயர் விஸ்தீரணம் கொண்டதும் அதில் நிற்கும் மரங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாகவும், கொழும்பு காணிப்பதிவகத்தில் எம். 2100/262 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும். வடக்கில் : கல்வல பாதையையும் ; கிழக்கில் :

துண்டுகள் 1பி, 1பி, 1பி 2, 1பி 3 ஐயும் ; தெற்கில் : துண்டு 1பி 3 ஐயும் ; மேற்கில் : 3235 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய துண்டு 1ஏ 4ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணம் உடையதும் கொழும்பு காணிப்பதிவகத்தில் எம். 2100/263 இல் பதிவு செய்யப்பட்டதுமான 3236 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பி 4 உள்ளடங்களாகவும்.

மேலாகச் செல்வதற்கான பாதை உரித்தும், பின்வரும் காணியை பயன்படுத்துவோரின் பாதை ஒதுக்கும் உள்ளடங்கலாகவும் :-

மேலே சொல்லப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. டி. ஜி. வீரசிங்கவினால் ஆக்கப்பட்ட 1995.08.30 ஆந் திகதியிட்ட 3235 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 1ஏ 4 என்றும் வடக்கில் : கலவெல்ல பாதையையும் ; கிழக்கில் : 3236 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1பி 4 என்னும் 6 அடி பாதையையும் ; தெற்கில் : துண்டு 1ஏ3 ஐயும் ; மேற்கில் ; துண்டுகள் 1ஏ3, 1ஏ2, 1ஏ1 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 3235 ஆம் இலக்க வரைபடத்திற்கேற்ப நான்கு பேர்ச்சஸ் (0ஏ, 0றூ. 4பே./0.0101 ஹெக்டேயர்) விஸ்தீரணம் உள்ளதும் கொழும்பு காணிப்பதிவகத்தில் எம் 2179/13இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

**ஆனத்திற்கு செல்லும் வழி**.- மஹரகம நகரிலிருந்து தெஹிவளை வீதி, வழியாக 750 மிற்றர் சென்று இடது பக்கம் திரும்பி கட்டுவாவல வீதிக்கு வந்து 02.5 மீற்றர் வரை சென்று இடது பக்கம் உள்ள குவாரி வீதியை அடையவும். மேலேயுள்ள வீதிக்கு இடது பக்கமாக மேலும் 200 மீற்றர் சென்று இறுதியாக வலதுபக்கம் திரும்பி சிறிய கடைக்கு அடுத்துள்ள 04 மீற்றர் அகலமுள்ள தனியார் பாதையில் சுமார் 75 மீற்றர் வரை சென்று இடது பக்கம் இறுதியாகவுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை அடையும்.

இவ்வாதனம் பகிரங்க ஏலமூலம் 2007, சனவரி 31 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் அதிகார வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணமான 2 1/2% (இரண்டரை வீரம் மட்டும்) ;

(4) ரூபா 45,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500.

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 3,000.

கொள்வனவு விலையின் மிகுதி 75% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்புகொள்ள வேண்டியவர் : உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி : 011-2576132.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
கீர்த்திவாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்,
இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார்துறை
வங்கிகளுக்கான மதிப்பீட்டாளர்கள், நீதிமன்ற
ஆணையாளர்கள்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 55ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி | கொழும்பு 03 |
| தொலைபேசி : 081-2227593, 081-2224371 | தொலைபேசி : 011-2441761, 011-2448526 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 2448526 |
| மின் அஞ்சல் : samera@diomond.lanka.net | மின் அஞ்சல் : samera@srilanka.net |

12-347

---

### மக்கள் வங்கி - இப்பாகமுவை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க
மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான
தீர்மானம்

**மாத்தளை நகருக்கு அண்மையில் பள்ளேபொல,
அலகொலஎலயில் அமைந்துள்ள அகுரம்பொட குரூப் அல்லது
மஹவத்தை என்ற காணியின் 02 ஆம் இலக்க காணி அதனுள்
அமைந்துள்ள அனைத்தும் அடங்லாக
ஏல விற்பனை**

**(பரப்பளவு 02ஏ. 00றூ. 00பே.)**

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2006.12.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏலவிற்பனை செய்யப் படும்.

**மேலதிக விவரங்களுக்கு**.- 1998.12.04 ஆந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியையும் 1998.11.16 ஆந் திகதி ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**ஆதனத்தை அடைத்தல்**.- இப்பாகமுவையிலிருந்து மெல்சிரிபுர வரை சென்று மெல்சிரிபுரையால் வலது பக்கமாக இருக்கும் மில்லவான பாதையில் 12 மைல் அளவுதூரத்தில் பள்ளேபொல அக்குரம்பொடை கிராமத்தில் அமைந்துள்ள அகுரம்பொடவத்தை என்ற காணியே இந்த ஆதனம் ஆகும்.

**பணம் செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாக செலுத்தப்பட வேண்டும் :-

(1) தாம் வாங்கிய தொகையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணமும் ;

(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும் கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கியின் பிராந்திய காரியாலய முகாமையாளர் அவர்களிடம் செலுத்துதல் வேண்டும்.

தொலைபேசி இல. : 037-22453, பெக்ஸ் : 037- 22338.

உரிமைப்பத்திரம், மேலதிக விவரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கெனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திருப்பிச் செலுத்தாமளிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யு. எம். ஐ, கல்லேல்ல
(சமாதான நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர், மதிப்பீட்டாளர்).

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037- 20062.

10-370

---

**மக்கள் வங்கி - பதுளை முதியங்கனை கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

**பதுளை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பதுளுபிடிய சர்க்கியூலர் வீதி இறைவரி இலக்கம் 73 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பெறுமதிவாய்ந்த காணியும் கட்டிடமும் ஏல விற்பனை**

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி என்னால் 2006 ஆம் ஆண்டின் திசெம்பர் 26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**அட்டவணை**

பதுளை மாவட்டம் மாநகரசபை எல்லைக்குள் பதுளுபிடிய சர்க்கியூலர் வீதி இறைவரி இலக்கம் 73 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 1979 ஆம் ஆண்டு செத்தெர்பர், ஒற்றோபர் வரையுள்ள காலப்பகுதியில் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் திரு. எம். கே. சி. பிரேமசந்திரவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 125 லொட் இல. 4 என குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் அமைந்துள்ள 5.70 பேர்ச்சஸ் பரப்பைக் கொண்ட பெறுமதிவாய்ந்த காணியும் கட்டடமும் அனைத்துமாகும்.

**மேலதிக விவரங்களுக்கு.**- 2006.06.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.09.29 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை அடைதல்.**- பதுளை நகரில் அமைந்துள்ள வீல்ஸ் பார்க் மைதானத்திற்கு முன் தென்படும் வீதி வழியாக 150 யார் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி பதுளுபிடிய வீதியில் கால் (1/4) மைல் தூரம் சென்று பதுளுபிடிய வீட்டுத் திட்டத்தை சென்றடைந்ததும் முதலாவது வீதியில் சிறிது தூரம் சென்றதும், இடது புறமாகவுள்ள ஊ பகுதியில் சிறிது தூரம் சென்றதும் பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ள இல. C/221 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணமும் ;

(6) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணமும் ;

(7) கொள்வனவு விலையில்மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் பதுளை பிராந்திய காரியாலய முகாமையாளர் அவர்களிடம் செலுத்துதல் வேண்டும். தொலைபேசி இல. : 055-2222165, 2223067/2223068 ; பெக்ஸ் : 055- 2222361.

ஒப்பனை பத்திரம் மற்றும் வேறு பெறுபேறுகள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டவாறு குறிப்பிட்டுள்ள பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% ஆன பணம் திரும்பி செலுத்தாமலிருக்கவும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யு. ஜயதிலக,
(சமாதான நீதவான்),
பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 48/1, கலுகல்பிடிய,
பதுளை,

தொலைபேசி இல. : 055- 2230846.

10-340

---

## சம்பத் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

0035 1000 2929-கென்ட் கார்மண்ட்

2006.02.06 ஆந் திகதிய "தினக்குரல்", "ஜலண்ட்", "திவயின" ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் 2006.03.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2005.09.01 ஆந் திகதிய வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2005, மாச்சு 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனை திகதி வரை பதினேழு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து முந்நூறு ரூபா (ரூ. 17,88,300) வருடத்துக்கு ஒன்பது தசம் ஐந்து வீத வட்டியையும் (9.5%) பத்தொன்பது இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று இருபத்தெட்டு ரூபா முப்பத்து நான்கு சதத்தையும் (ரூ. 1,90,2528.34) விளம்பர கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் ஏதும் இருப்பின் அவற்றையும் (கட்டணங்கள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்தும்) அறவிடுவதற்காக கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணிகள் சொத்துகள் கண்டி அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் 28.12.2006 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம் காலியின் நான்கு வாசல்களுக்கு இடையிலும் மாநகர சபை எல்லைக்குள்ளும் மைதிபே கிராமத்தில் அமைந்த கபுலந்தல கும்புற என்றழைக்கப்படும் காணியின லொட் இல. 13 இன் லொட் 13பி என குறிப்பிடப்பட்டுள்ள லொட் 13 பி1, காணித்துண்டின் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட எல்லா பிரிவுகளும் இது வடக்கில் : ஸ்ரீ சுக்தபால மாவத்தை எட்டிலிகொடவாலும் ; கிழக்கில் : இல. 02 மாடிபே ஒழுங்கையாலும் ; தெற்கில் ; அதே காணியின் லொட் இலக்கம் $13B_2$ மற்றும் $13B_3$ ; மேற்கில் : அதே காணியின் லொட் 13ஏ யாலும் சூழப்பட்டு அனுமதிபெற்ற அளவையாளர் ஏ. டீ. ஏ. குணசேகர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004. யூன் 21 ஆந் திகதி 3251 வரைபடம் பிரகாரம் 00ஏ. 01றூ. 25.2 விஸ்தீரணம் கொண்டதாக காலி காணிப்பதிவில் அதிகாரம்/போலியோ ஏ 603/83 இன் கீழ் பதியப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளை பிரகாரம்,

கம்பனிச் செயலாளர்.

12- 385/4

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.